திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு, கண்ட்டோன்மென்ட் பகுதியில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட புதிய காவேரி மருத்துவமனை கிளையை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி. திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், காவேரி மருத்துவமனை நிர்வாகிகள் சந்திரகுமார், மணிவண்ணன், செங்குட்டுவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோயம்பத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூரில் அமைந்துள்ள தி.மு.கழக அலுவலகத்தில், கோயம்பத்தூர் மண்டல, ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகின்ற விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் பணி செவ்வென மேற்கொள்ளுதல் மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பாக நடத்துதல் குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதுசமயம் இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் வி.பி.இராசன், திப்பம்பட்டி ஆறுசாமி, துணைச் செயலாளர்கள் மாரியப்பன் கென்னடி, மு.பொன்தோஸ் ஆகியோர் கலந்துக்கொண்டனர். கூட்ட ஏற்பாடு கோவை மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் தென்னை சிவா (வடக்கு), ஞானசேகரன் (தெற்கு), டெம்போ சிவா (மாநகரம்) கலந்துகொண்டனர்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

மதசார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

17.6.2024 - வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்

நேரம்	இடம்	கலந்துகொள்ளும் ஊராட்சிகள்
காலை 8.30 மணி	சத்திரம்	நாயக்கனூர். பீமகுளம்
காலை 9.00 மணி	கல்லரபட்டி	நரசிங்கபுரம்
காலை 9.30 மணி	பூங்குளம்	பஸ்நிலையம்
காலை 10.00 மணி	மரிமானி குப்பம்	புதூர் பஸ் நிலையம்
காலை 10.30 மணி	மீட்டூர்	பஸ் நிலையம்
காலை 11.00 மணி	102 ரெட்டியூர்	பஸ் நிலையம்
காலை 11.30 மணி	நிம்மியம்பட்டு	பஸ் நிலையம்
காலை 12.00 மணி	வெள்ளகுட்டை	பஸ் நிலையம்
காலை 12.30 மணி	கொத்தகோட்டை	கூட்டுரோடு
காலை 1.00 மணி	பெரியகுரும தெரு	பஸ் நிலையம்
காலை 1.30 மணி	விஜிலபுரம்	பஸ் நிலையம்
மாலை 4.00 மணி	பெத்தவேப்பம்பட்டு	பஸ் நிலையம்
மாலை 4.30 மணி	வள்ளிபட்டு	பஸ் நிலையம்
மாலை 5.00 மணி	கோவிந்தபுரம்	கோயில் எதிரில்
மாலை 5.30 மணி	வளையர்பட்டு நெக்கான மலை	அம்பேத்கார் சிலை

18.6.2024 - நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி

காலை 8.30 மணி	நாராயணபுரம்	பஸ் நிலையம்
காலை 9.00 மணி	அலசந்தாபுரம்	ஊர் மத்தியில்
காலை 9.30 மணி	திம்மாம்பேட்டை	பஸ் நிலையம்
காலை 10.00 மணி	புல்லூர்	மோட்டூர்
காலை 10.30 மணி	சிக்கனாங்குப்பம் திகுவாப்பாளையம்	பஸ் நிலையம்
காலை 11.00 மணி	அழிஞ்சிகுளம்	ஊர் மத்தியில்
காலை 11.30 மணி	தும்பேரி	பஸ் நிலையம்
காலை 11.45 மணி	சங்கராபுரம்	ஊர் மத்தியில்
பகல் 12.00 மணி	எக்லாஸ்புரம்	ஊர் மத்தியில்
பகல் 12.30 மணி	வடக்குபட்டு	ஊர் மத்தியில்
பகல் 12.45 மணி	அம்பலூர்	பஸ் நிலையம்
பகல் 1.00 மணி	கொடையாஞ்சி	ஊர் மத்தியில்
பகல் 1.15 மணி	தெக்குப்பட்டு	ஊர் மத்தியில்
மாலை 3.30 மணி	மல்லாங்குப்பம்	ஊர் மத்தியில்
மாலை 3.45 மணி	ராமநாயக்கன்பேட்டை	பஸ் நிலையம்
மாலை 4.00 மணி	ஆவரங்குப்பம்	ஊர் மத்தியில்
மாலை 4.30 மணி	மல்லகுண்டா	பஸ் நிலையம்

18.6.2024 - உதயேந்திரம் பேரூர் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி

மாலை 5.00 மணி	மேட்டுப்பாளையம்	பஸ் நிலையம்
மாலை 5.30 மணி	உதயேந்திரம்	பேரூராட்சி அலுவலகம் எதிரில்
மாலை 6.00 மணி	மேட்டுத் தெரு	பஸ் நிலையம்
மாலை 6.30 மணி	குந்தாணி மேடு	கோயில் எதிரில்
மாலை 7.00 மணி	C.V.பட்டரை	பஸ் நிலையம் எதிரில்
மாலை 7.30 மணி	வெங்கடாபுரம்	கோயில் எதிரில்

19.6.2024 - ஆலங்காயம் பேரூர் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி

காலை 8.30 மணி	புலவர் பள்ளி	பஸ் நிலையம்
காலை 8.15 மணி	தர்மராஜபுரம்	பஸ் நிலையம்
காலை 8.30 மணி	ஆலங்காயம்	பஸ் நிலையம் அம்பேத்கர் சிலை அருகில்
காலை 9.00 மணி	பெத்தூர் மாரியம்மன் கோயில் அருகில்	மாரியம்மன் கோயில் அருகில்
காலை 9.30 மணி	மார்க்கெட் மூலை	மார்க்கெட் மூலை
காலை 10.00 மணி	ஆலங்காயம் ஆதி காலனி	ஆலங்காயம் ஆதி காலனி
காலை 10.30 மணி	பங்கூர்	பர்கூர்

19.6.2024 - திருப்பத்தூர் கிழக்கு வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி

காலை 11.30 மணி	ஆண்டியப்பனூர்	பஸ் நிலையம்
காலை 12.00 மணி	இருனாப்பட்டு	பஸ் நிலையம்
காலை 12.30 மணி	பெருமாப்பட்டு	பெருமாப்பட்டு பஸ் நிலையம் ஜடையனூர் பஸ் நிலையம்
மதியம் 1.00 மணி	பள்ளவள்ளி	ஊர் மத்தியில்
மதியம் 1.30 மணி	குரிசிலாப்பட்டி	பஸ் நிலையம்

19.6.2024 - வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி வாணியம்பாடி நகரம்

மாலை 4.00 மணி	பெரியகோட்டை பெருமாள் கோயில்
மாலை 4.30 மணி	கடைக்காரர் தெரு இக்பால் சாலை
மாலை 5.00 மணி	ஜின்னா மேம்பாலம் பார சந்தி அருகில்
மாலை 5.30 மணி	கோணமேடு Dr. B.R.அம்பேத்கர் சிலை
மாலை 6.00 மணி	புதூர் மகாத்மா காந்தி சிலை அருகில்
மாலை 6.30 மணி	பைபாஸ் நியூ டவுன் பேருந்து நிலையம்
இரவு 7.00 மணி	பெருமாற் பேட்டை கூட்டு ரோடு

குவைத்தில் நடந்த தீ விபத்தில் உயிரிழந்த திருச்சி திருவெறும்பூர் தொகுதி நவல்பட்டு போலீஸ் காலனி அண்ணா நகரைச் சேர்ந்த ராஜாவின் குடும்பத்தினரை சந்தித்து திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆறுதல் தெரிவித்து நிதியுதவி வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன், பொதுக்குழு உறுப்பினர் சண்முகம், கழக நிர்வாகி தங்கமணி மற்றும் நிர்வாகிகள் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

தஞ்சை வடக்கு மாவட்டக் கூட்டம் - வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்புக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

தஞ்சை, ஜூன் 17-

தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற 19.06.2024 புதன் கிழமை மாலை 05. 00 மணியளவில் பாபநாசம் மெயின் ரோட்டில் உள்ள பாபநாசம் பேரூர் கழக அலுவலகத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதனை தொடர்ந்து மாலை 06.00 மணியளவில் பாபநாசம் கீழவீதியில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி, பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்று கின்றனர்.

மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆர்.சுதா வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகிறார்.

இதில் பாபநாசம் தொகுதி பார்வையாளரும், தாட்கோ தலைவருமான உ.மதிவாணன், பாபநாசம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துக்கொள்ள உள்ளனர்.

அதுசமயம், இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் , ஊராட்சி, வார்டு மற்றும் கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பிளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தவறாது கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

விழுப்புரம் தெற்கு - மருத்துவ அணி

சீனு.காவியவேந்தன் - வெ.திவ்யா மணவிழா வரவேற்பு!

அமைச்சர் க.பொன்முடி - பொன்.கௌதமசிகாமணி வாழ்த்து!

விழுப்புரம், ஜூன் 17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வாழ்த்துகளுடன் விழுப்புரம் தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.சீனு.காவியவேந்தன் - டாக்டர்.வெ.செ. திவ்யா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (17.06.2024 - திங்கள் கிழமை) மாலை 6 .00 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெறுகிறது. உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி.யின் நேர்முக உதவியாளர்

ராஜா சிதம்பரம் மனைவி சௌந்திரம் மறைவு!

வி.ஜெகதீசன் - கே.என்.அருண் நேரு எம்.பி. - எம்.பிரபாகர் எம்.எல்.ஏ. அஞ்சலி!

பெரம்பலூர், ஜூன் 17 -

கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., நேர்முக உதவியாளர், ராஜாசிதம்பரம் மனைவி திருமதி ரா. சௌந்திரம் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

சொக்கநாதபுரம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த சௌந்திரம் உடலுக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெக தீசன் தலைமையில், கே.என்.அருண்நேரு.எம்.பி., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சொக்கநாதபுரம் கிரா மத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி. இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி. எஸ்.பெரியசாமி, தலை மைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக் க்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந. ஜெக தீஷ்வ ரன், எஸ். அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ் குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப. செந்தில்நாதன், பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை தலைவர் எம்.ரெங்கராஜ், வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபாசெல்லப்பிள்ளை மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.

தாம்பரம் மாநகராட்சியில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினவிழா!

சென்னை, ஜூன் 17-

உலக குழந்தைகள் தொழிலாளர்கள் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு HAND IN HAHD INDIA சார்பில் தாம்பரம் மாநகராட்சி வளகத்தில் மாநகர மேயர் கா.வசந்தகுமாரி, 4வது மண்டலத்தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும் அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும் குழந்தைகளை சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் எனவும் தமிழகத்தை குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமார உறுதி கூறுகிறோம் என்று நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் உறுதி மொழி ஏற்றனர். இன்நிகழ்ச்சி மாநகராட்சி சுகதாரதுறை அதிகாரிகளும் இரா.செல்வகுமார், எம். வினோத், நவீன்குமார் உள்ளிட்ட கழகத்தினரும் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், க.ராஜேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் மற்றும் பலர் உள்ளனர்.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. நேர்முக உதவியாளர் முரசொலி முகவர் ராஜா சிதம்பரம் மனைவி சௌந்திரம் உடல்நலக்குறைவால் காலமானார். அன்னாரது உடலுக்கு, அருண் நேரு எம்.பி., மலரஞ்சலி செலுத்தினார். மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.